## 5.3 மகிமையான ஆராதனை

**வேத வசனம்:** இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர். சங்கீதம் 22:3

**அறிக்கை:**
நாம் தேவனை ஆராதித்து அவருடைய மகிமையுள்ள பிரசன்னத்திற்குள் வருவோம்

**சத்தியம்:** ஓ தேவனாகிய கர்த்தாவே, என் இராஜாவே, இந்த உலகம் உம்முடைய மகத்துவமான செயல்களையும் உம்முடைய ராஜ்யத்தின் மகத்துவத்தையும் அறிந்து கொள்ளும்படி நான் உம்மை ஆராதித்து உம்முடைய நாமத்தை எப்பொழுதும் மேன்மைப்படுத்துவேன்.

**வேதப்பகுதி**
*சங்கீதம் 103*

### பாடக்குறிப்புகள்

- **தேவன் துதிக்கும் கனத்துக்கும் பாத்திரர்** - *சங். 145:1-3*
- **தேவனை ஆராதிப்பதற்காகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம்** - *சங். 103: 1-5*
- **எல்லா நாமத்துக்கும் மேலான நாமம்** - *அப். 2:21, சங். 72:8,19*
- **தேவனுடைய பிரசன்னத்தில் வந்து வாசம் பண்ணுதல்** - *1 நாளா.16:26,27*

### ஆர்வமூட்டும் வினாக்கள்
(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- தேவனை ஆராதிப்பது எவ்வாறு அவருடைய பிரசன்னத்திற்குள் நம்மை நடத்துகிறது?
- சங்கீதம் 72:17-19 அடிப்படையில் நாம் கர்த்தரை எதற்காகத் துதிக்கலாம்?
- இயேசு என்ற நாமத்தில் உள்ள அதிகாரம் என்ன? பிலி. 2:9,10



### செயல்

பாடல் மூலம் மாத்திரம் அல்ல. நம் ஒவ்வொரு செயல்கள் மூலமாகவும் தேவனை ஆராதிக்கலாம். நீ சிறந்தவனாக இருப்பதன்மூலம் தேவனை ஆராதித்து தொழுதுகொள்ள முயற்சி செய்.

### ஆராதனைக்கான ஒரு வழி

தேவன் நம் ஒவ்வொருவரையும் தனித்துவமாகப் படைத்திருப்பது போல நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதங்களில் அவரை ஆராதிக்கலாம். கொடுக்கப்பட்டுள்ள படச்சட்டத்தில் தேவனை ஆராதித்து அவருடைய பிரசன்னத்திற்குள் செல்லும் ஒரு வழியை எழுது.

**சிந்திக்க:**
தேவனைத் தொழுதுகொள்ளும் வழிகள் என்ன?

______________________________

______________________________

**ஜெபம்:**

ஜெபம் மற்றும் ஆராதனை மூலம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வழிநடத்திச் செல்லுகிற அவருடைய தயவுக்காக அவருக்கு நன்றி சொல்லும் ஜெபத்தை எழுது.

______________________________

______________________________